இன்றைய செய்தி நாளைய வரலாறு



கலைஞர் 100 1924 - 2023

# முரசொலி

Murasoli

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

www.murasoli.in facebook.com/murasoli180 twitter.com/murasoli180 instagram.com/murasoli180 youtube.com/murasoli180 murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 81 – ஒலி : 342 – திருவள்ளுவர் ஆண்டு 2054 – ஆடி 06 – சனிக்கிழமை 22 ஜூலை 2023 – கோவை ★★ 12 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 81 - Issue 342 : Thiruvalluvar Year - 2054 - Aadi 06 - Saturday 22 July 2023 - Kovai ★★ 12 Pages ₹ 5.00


### மணிப்பூரில் வன்முறை மோடி மீது ராகுல்காந்தி குற்றச்சாட்டு!

டெல்லி, ஜூலை 22- பிரதமர் மோடியின் செயலற்ற நிர்வாகத்தால் வன்முறையால் பாதிக்கப்பட்ட மணிப்பூர் மாநிலத்தை அராஜகத்திற்கு அழைத்து சென்றுள்ளதாக ராகுல் காந்தி குற்றம் சாட்டியுள்ளார்.

காங்கிரஸ் மூத்த தலைவர் ராகுல் காந்தி வெளியிட்ட ட்விட்டர் பதிவில்,

மணிப்பூரில் இந்தியா என்ற கொள்கை தாக்கப்படும் போது அதை வேடிக்கை பார்த்து கொண்டு இருக்க முடியாது என்று கூறியுள்ளார்.

மணிப்பூர் மக்களுடன் ஒன்றுபட்டு நிற்பதாகவும் ராகுல் காந்தி தெரிவித்துள்ளார். மோடியின் செயலற்ற நிர்வாகம் வன்முறையால் பாதிக்கப்பட்ட மணிப்பூர் மாநிலத்தை அராஜகத்திற்கு அழைத்து சென்றுள்ளதாக குற்றம் சாட்டியுள்ளார்.

### மகாராஷ்டிராவில் நிலச்சரிவு:

மும்பை, ஜூலை 22- தென்மேற்கு பருவமழையால் மகாராஷ்டிரா மாநிலத்தில் கனமழை பெய்து வருகிறது. குறிப்பாக புனே, மும்பையில் அதி கனமழை பெய்து வருகிறது. இதற்கிடையே, நேற்று முன்தினம் இரவு ராய்காட் மாவட்டத்தில் உள்ள கலாபுர் அருகே நிலச்சரிவு ஏற்பட்டது. இப்பகுதியில் பழங்குடியினர் வசிக்கும் குக்கிரா மங்கள் உள்ளன. இதனால் நிலச்சரிவில் சுமார் 30 குடும்பங்கள் சிக்கியிருக்கலாம் என அஞ்சப்படுகிறது. காலை நிலவரப்படி நிலச்சரிவில் இருந்து 25 பேர் மீட்கப்பட்ட நிலையில், 4 பேர் உயிரிழந்தனர். தேசிய பேரிடர் மீட்புக்குழு படைகள் சம்பவ இடம் அடைந்து, நிலச்சரிவில் சிக்கியவர்களை மீட்கும் பணியில் ஈடுபட்டு வருகின்றனர். இந்நிலையில், நிலச்சரிவில் சிக்கி பலியானோர் எண்ணிக்கை 12 ஆக அதிகரித்துள்ளது.

## நாட்டைக் காக்க நாடாளுமன்றத் தேர்தலில்

# இளைஞர் அணியின் பங்கை அதிகம் எதிர்பார்க்கிறேன்!

## இயக்கத்தின் இதயமாம் இளைஞர் அணியின் 44 ஆவது ஆண்டையொட்டி முதல்வர் மு.க.ஸ்டாலின் வாழ்த்துச் செய்தி!

**சென்னை, ஜூலை 22 -**

**44வது ஆண்டு விழாவைக் கொண்டாடும் கழக இளைஞர் அணிக்கு வாழ்த்துத் தெரிவித்து நேற்று முன்தினம் (20.07.2023), திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவரும் தமிழ்நாடு முதலமைச்சருமான மு.க. ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள சமூக வலை தளப் பதிவு வருமாறு:-**

இயக்கத்தின் இதயமாம் இளைஞரணிக்கு இன்று 44 வயது. 44ஆவது ஆண்டு விழாவைக் கொண்டாடும் இளைஞரணிச் செயலாளர் உதயநிதி அவர்களுக்கும் புதிதாக பொறுப்பேற்றுள்ள நிர்வாகிகளுக்கும் இளைஞரணியின் ஆற்றல்மிகு இளைஞர்கள் அனைவர்க்கும் எனது மனமார்ந்த வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**கழகத்தின் வெற்றிக்கு உறுதுணையாக இளைஞர் அணி!**

கழகத்தின் எழுச்சிக்கும் உணர்ச்சிக்கும் வெற்றிக்கும் மகிழ்ச்சிக்கும் தோன்றிய காலம் முதல் உறுதுணையாக இருந்து வருவது இளைஞரணியாகும். அதே பங்களிப்பை வருங்காலங்களிலும் வழங்க வேண்டும் எனக்கேட்டுக் கொள்கிறேன்.

**கழக அரசின் சாதனைகளை மக்களிடம் கொண்டு செல்வீர்!**

உதயநிதி பொறுப்பேற்ற பின் நடத்திய



திராவிட மாடல் பாசறைக் கூட்டங்கள் நமது கொள்கையை ஊட்டும் வகுப்புகளாக அமைந்திருந்தன. இயக்கத்தை நோக்கி வரும் இளைஞர்களை ஈர்க்கும் கூட்டங்களாக மட்டுமல்ல, கொள்கை எதிரிகளுக்குப்பதிலளிக்கும்கூட்டங்களாகவும் அமைந்திருந்தன. இத்தகைய பாசறைக் கூட்டங்களை வருங்காலத்திலும் தொடரக் கேட்டுக் கொள்கிறேன்.

இந்தியாவைக் காக்கும் நாடாளுமன்றத் தேர்தல் நெருங்கி வரும் நிலையில் இளைஞரணியினரின் பங்களிப்பை நான் அதிகம் எதிர்பார்க்கிறேன். கழக அரசின் ஈராண்டு சாதனைகளை மக்கள் மனதில் பதியும் வகையில் பரப்புரை செய்வீர்கள் என்பதில் சந்தேகமில்லை. அதே நேரத்தில் தேர்தல் பணி என்பது திட்டமிட்டுச் செய்ய வேண்டியது ஆகும்.

அந்த தேர்தல் பணிகளை எப்படிச் செய்ய வேண்டும் என்பதை இளைஞரணிப் பொறுப்பாளர்கள், உறுப்பினர்கள் அனைவர்க்கும் கற்றுத்தர வேண்டும். இதற்கான பயிற்சியை மாநாடு கூட்டி அனைத்து இளைஞரணிப் பொறுப்பாளர்களுக்கும் வழங்குமாறு இளைஞரணிச் செயலாளரைக் கேட்டுக் கொள்கிறேன்.

**கலைஞரும் - பேராசிரியரும் தொடங்கி வைத்த இளைஞர் அணி!**

எந்த நம்பிக்கையோடும் எதிர்பார்ப்புடனும் இளைஞரணியைத் தமிழினத் தலைவர் கலைஞர் அவர்களும்



இனமானப் பேராசிரியர் அவர்களும் தொடக்கி வைத்தார்களோ அதே எதிர்பார்ப்புடனும் நம்பிக்கையுடனும் நான் இருக்கிறேன். உங்களால் முடியும்! உங்களால் மட்டுமே முடியும். வாழ்த்துகள்!

இவ்வாறு தலைவர், முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது வலைதளப் பதிவில் வாழ்த்தியுள்ளார்.

### உதயநிதி ஸ்டாலினுக்கு பாராட்டு!

**உதயநிதி பொறுப்பேற்ற பின் நடத்திய திராவிட மாடல் பாசறைக் கூட்டங்கள் நமது கொள்கையை ஊட்டும் வகுப்புகளாக அமைந்திருந்தன. இயக்கத்தை நோக்கி வரும் இளைஞர்களை ஈர்க்கும் கூட்டங்களாக மட்டுமல்ல, கொள்கை எதிரிகளுக்குப் பதிலளிக்கும் கூட்டங்களாகவும் அமைந்திருந்தன. இத்தகைய பாசறைக் கூட்டங்களை வருங்காலத்திலும் தொடரக் கேட்டுக் கொள்கிறேன்.**



## எம்.ஐ.டி. தொழில்நுட்பக் கல்லூரியில் - 1000 பேர் அமரக்கூடிய வகையில்

# 50 கோடி ரூபாயில் - அதி நவீன உள் விளையாட்டு கலையரங்கம்!

## ரூ.25 கோடியில் கற்றல் வளாகம் - பவள விழாப் பூங்கா! எம்.ஐ.டி. பவள விழாவில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு!

**சென்னை, ஜூலை 22-**

**சென்னை - குரோம்பேட்டையில் உள்ள எம்.ஐ.டி. தொழில்நுட்பக் கல்லூரியில், நேற்று முன்தினம் காலை நடைபெற்ற - அக்கல்லூரியின் 75ஆம் ஆண்டு பவள விழாவில் பேருரையாற்றிய முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள், "எம்.ஐ.டி. தொழில்நுட்பக் கல்லூரியில் 1000 பேர் அமரக் கூடிய வகையில் 50 கோடி ரூபாய் செலவில் அதிநவீன" உள் விளையாட்டு அரங்கம் மற்றும் கலையரங்கம் ஏற்படுத்தப்படும்!" என்றும், "ரூ.25 கோடியில் கற்றல் வளாகம் - பவள விழாப் பூங்கா அமைக்கப்படும்" என்றும் அறிவித்தார்.**

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (20.7.2023) குரோம்பேட்டை, மெட்ராஸ் தொழில்நுட்பக் கல்லூரி பவள விழாவில் கலந்துகொண்டு ஆற்றிய உரை வருமாறு:-

'எம்.ஐ.டி.' எனப்படும் 'மெட்ராஸ் இன்ஸ்டிட்யூட் ஆஃப் டெக்னாலஜி'யின் பவள விழா நிகழ்ச்சி மிகுந்த எழுச்சியோடு, ஏற்றத்தோடு நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இந்த விழாவில், நானும் கலந்துகொண்டு உங்களுடைய மகிழ்ச்சியில் பங்கேற்கக்கூடிய ஒரு நல்ல வாய்ப்பைப் பெற்றமைக்கு நான் பெருமையும், மகிழ்ச்சியும் அடைகிறேன். கல்வியில் சிறந்த தமிழ்நாடு என்று பெயரெடுத்த மாநிலம் தமிழ்நாடு!



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (20.7.2023) செங்கல்பட்டு மாவட்டம், குரோம்பேட்டை, மெட்ராஸ் தொழில்நுட்பக் கல்லூரி பவள விழாவில் முதன்மை விருந்தினராக கலந்து கொண்டு விழாப் பேருரையாற்றினார். இவ்விழாவில், உயர்கல்வித் துறை அமைச்சரும் இணை வேந்தருமான முனைவர் க.பொன்முடி, குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன், சட்டமன்ற உறுப்பினர்கள் இ.கருணாநிதி, எஸ்.ஆர்.ராஜா, உயர்கல்வித் துறை முதன்மைச் செயலாளர் ஆ. கார்த்திக், தொழில்நுட்ப கல்வி இயக்குநர் டாக்டர் டி.ஜி.வினய், செங்கல்பட்டு மாவட்ட ஆட்சித் தலைவர் ஆ.ர.ராகுல்நாத், அண்ணா பல்கலைக்கழக துணை வேந்தர் பேராசிரியர் வேல்ராஜ், எம்.ஐ.டி. கல்லூரியின் முதல்வர் முனைவர் பிரகாஷ், எம்.ஐ.டியின் நிறுவனர் குடும்பத்தைச் சேர்ந்த திருமதி பிரேமா சீனிவாசன், எம்.ஐ.டி. முன்னாள் மாணவர் சங்கத் தலைவர் செந்தில்நாதன், பல்கலைக்கழக ஆட்சிமன்றக் குழு உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

இந்தியாவின் புகழ்பெற்ற கல்வி நிறுவனங்களின் பட்டியலை எடுத்துப் பார்த்தால், அது எந்தப் பாடமாக இருந்தாலும், முன்னணி நிறுவனங்களின் பட்டியலில், தமிழ்நாட்டின் கல்வி நிறுவனங்கள் நிச்சயமாக இடம் பெறும். அப்படி இடம்பெறும் நிறுவனங்களில் ஒன்றுதான் இந்த எம்.ஐ.டி. இந்த எம்.ஐ.டிக்கு கிடைத்த பெருமை மட்டுமல்ல, நம்முடைய தமிழ்நாட்டுக்கே கிடைத்திருக்கக் கூடிய பெருமை என்பதை நான் இங்கே பதிவு செய்ய விரும்புகிறேன்.

மாணவர்களின் வழிகாட்டியாகவும், இளைஞர்களின் நம்பிக்கை நட்சத்திரமாகவும் விளங்கிய முன்னாள் குடியரசுத் தலைவர் ஏவுகணை மனிதர் என்று போற்றப்படும் ஏ.பி.ஜே.அப்துல்கலாம் அவர்கள் படித்த கல்லூரி என்பதை விட, உங்களுக்கு வேறு பெருமை தேவையில்லை. அத்தகைய பெருமைமிகு கல்லூரியின் பவளவிழாவில் கலந்து கொள்வதில் நான் மீண்டும், மீண்டும் மகிழ்ச்சியடைகிறேன். எனக்குக் கிடைத்திருக்கக் கூடிய பெருமையாக நான் கருதுகிறேன்.

**நேரு, காமராசர், கலைஞர் வருகை தந்து சிறப்பித்த கல்லூரி!**

முக்கியத் தலைவர்கள் பலரும் வெவ்வேறு காலக்கட்டங்களில் இங்கு வருகை தந்திருக்கிறார்கள். எம்.ஐ.டி.யின் முதலாவது பட்டமளிப்பு விழா 1952ஆம் ஆண்டு நடந்த போது நவீன இந்தியாவின் சிற்பி அன்றைய பிரதமர் ஜவகர்லால் நேரு அவர்கள் கலந்து கொண்டிருக்கிறார்கள்.

இந்தக் கல்லூரியின் பொறியியல் மற்றும் மின்னியல் ஆய்வுக் கூடத்தை தொடங்கி வைத்தவர் முன்னாள் முதலமைச்சர் பெருந்தலைவர் காமராசர் அவர்கள்.


தொடர்ச்சி 3ஆம் பக்கம்